| | |
|---|---|
| அனுப்புநர் | பெறுநர் |
| க.செல்வகுமார், | 1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி. |
| இணை இயக்குநர் (மேல்நிலை) | 2. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள். |
| அரசுத் தேர்வுகள் இயக்ககம், | |
| சென்னை – 600 006. | |

ந.க.எண். 016388 /எச்.1/2023 நாள்: 08.01.2024

ஐயா / அம்மையீர்,

பொருள்: அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 - மார்ச்-2024 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு – பெயர்ப்பட்டியலை பதிவிறக்கம் செய்தல் - சார்பு.

பார்வை: இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம், நாள்:01.11.2023 மற்றும் 03.01.2024

------

பார்வையில் காணும் 01.11.2023 நாளிட்ட கடிதத்தில் மார்ச்- 2024, மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) பொதுத் தேர்விற்கான பள்ளி மாணவர்களின் விவரங்களடங்கிய பட்டியலில் மாணவர்களின் பெயர் சேர்த்தல் (By Transfer) / நீக்குதல் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ள 03.11.2023 பிற்பகல் முதல் வாய்ப்பு வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் தயாரிக்கப்பட்ட மார்ச் - 2024 மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) பொதுத் தேர்விற்கான பள்ளி மாணவர்களின் தேர்வெண்ணுடன் கூடிய பெயர்ப்பட்டியலினை அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களும் **03.01.2024 அன்று பிற்பகல் முதல்** பதிவிறக்கம் செய்து கொள்ளுமாறு பார்வையில் காணும் 03.01.2024 நாளிட்ட கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

தற்போது +1 Arrear பெயர் பட்டியலினை அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களும் **08.01.2024 அன்று பிற்பகல் முதல்** அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளமான www.dge.tn.gov.in - க்கு சென்று தங்கள் பள்ளிகளுக்கென வழங்கப்பட்டுள்ள User ID மற்றும் Password -ஐ பயன்படுத்தி பதிவிறக்கம் செய்து கொள்ள அறிவுறுத்திடுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/-

இணை இயக்குநர்(மேல்நிலை)

<u>நகல்:</u>

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை மற்றும் தனியார் பள்ளிகள்) - தகவலுக்காக